**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.NO. 159/2021**

**Deposition of Witness for P.W.3**

| | | |
|---|---|---|
| NAME | - | கிருஷ்ணமூர்த்தி |
| FATHER'S NAME | - | செங்க மந்திரி |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.11.2023.**

A1 A2. A5 Present A6 Produced.A3 A4 A7 ABSENT. PETITION U/S.317 CRPC FILED AND ALLOWED.

நான் ஒ ராஜபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். வழக்கில் இறந்த நபரை எனக்கு தெரியாது. ஆஜரில் இருக்கும் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையின் போது வழக்கில் இறந்து போன நபர் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றும் அவருக்கு தாய் தந்தை இல்லை என்றும் அவர்

பராரியாக சுற்றி திரிவான் அவனுக்கு நீச்சல் தெரியாது என்றும் நாய் குலைத்தால் பயந்து விடுவான் என்றும் 03.012015 ஆம் தேதி ஒடுகத்தூர் வேணுகோபால் என்பவரின் கிணற்றில் அழுகிய நிலையில் பிணம் மிதந்ததாகவும் அந்த பிரேதத்தின் போட்டோவை காட்டி போலீசார் விசாரணை செய்த போது இறந்த நபர் சீனிவாசன் தான் என்று அவரது உறவினரான ருத்ர மூர்த்தி அடையாளம் காட்டினார் என்றும் 04.012015 ஆம் தேதி நானும் எங்கள் ஊரை சேர்ந்த கோவிந்தசாமி மகன் வெங்கடேசன், முருகேசன் மகன் ராஜேஷ், கோவிந்தசாமி மகன் நாராயணன் மற்றும் வேணுகோபால் மகன் விநாயக மூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சீனிவாசன் உடலை அவரது பெரியம்மாவான தோளப்பள்ளி கிராமத்தை சேர்ந்த மவுந்தலு செட்டியார் மனைவி ஜெயலஷ்மி என்பவர் அடையாளம் காட்டினார் என்றும் ஆய்வாளர் என்னிடம் விசாரணை செய்த போது சீனிவாசன் குடிபோதையில் கிணற்றில் தவறி விழுந்து விட்டு இருப்பான் என்று சொல்லியிருந்தேன் என்றாலும் 25.11.2020 ஆம் தேதியில் காலை 10 மணிக்கு எதிரி லோகு காவல் நிலையத்தில் சாட்சிகள் முன்னிலையில் சீனிவாசனை அடித்து கிணற்றில் தூக்கி போட்டு கொலை செய்ததாக வாக்குமூலம் கொடுத்தாக கேள்விபட்டேன் என்றும் கூறியுள்ளேன் என்றாலும் தற்போது எதிரிகளுக்கு ஆதராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

P REVATHY

Digitally signed by P REVATHY